**செய்தி வெளியீடு எண்:535** **நாள்: 14.08.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

சுதந்திர தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K பழனிசாமி அவர்களுக்கு, கோயம்புத்தூர் மாவட்டம், சுகுணா பள்ளிக்கூடத்தில் முதலாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஸ்ரீவந்த் அனுப்பிய வாழ்த்துக் கடிதத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதத்தின் விவரம் பின்வருமாறு:-

"இந்திய சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, எனக்கு வாழ்த்துக் கடிதம் அனுப்பிய உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினையும், சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் வரைந்திருந்த தேசியக் கொடியினையும், தேசிய வரைபடத்தினையும் கண்டு மகிழ்ச்சியுற்றேன். இந்த இளம் வயதில் உங்களுடைய நாட்டுப்பற்றினைக் கண்டு பெருமையடைந்தேன்.

நீங்கள் கல்வியில் சிறந்த மாணவராகவும், ஒழுக்கத்தில் மேன்மையானவராகவும் திகழ்ந்து, நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமை சேர்த்திட எனது ஆசிகளையும், வாழ்த்துகளையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 600 009**
**நாள்: 14.8.2017**